*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*23 09 2025 12 40*
*செவ்வாய்க்கிழமை நண்பகல்*

**தலைப்புச் செய்திகள்**

- ஆயுஷ்மான் பாரத் திட்டம் உலகின் முன்னோடி சுகாதார திட்டமாக திகழ்கிறது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.
- ஆயுர்வேத மருத்துவ முறைகள் மூலம் ஆரோக்கியமான, சமுதாயத்தை உருவாக்க உறுதியேற்போம் என்று ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.
- பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 25 லட்சம் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்குகிறது.
- Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Meghna Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

< < < < > > > >

ஆயுஷ்மான் பாரத் திட்டம் நாட்டில் சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தி உலகின் முன்னோடி சுகாதார திட்டமாக திகழ்கிறது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வளர்ச்சியடைந்த சுயசார்புடைய இந்தியாவை உருவாக்குவது என்ற இலக்கை அடைய இது உதவிகரமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் இதுவரை 55 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் இத்திட்டத்தின்கீழ் இலவச சிகிச்சை அளிக்கப்படுவதையும் திரு. ஜெ.பி. நட்டா சுட்டிக்காட்டியுள்ளார்.

< < < < > > > >

தேசிய ஆயுர்வேத தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகள் மூலம் ஆரோக்கியமான, வளர்ச்சியடைந்த சமுதாயத்தை உருவாக்க இந்நாளில் உறுதியேற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பருவநிலை மாற்றம் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை குணப்படுத்துவதில் பாரம்பரிய மருத்துவ முறைகள் உதவிகரமாக உள்ளதாகவும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான வாழ்விற்கு ஆயுர்வேத மருத்துவம் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின் தருமபுரி மாவட்டம் கம்பைநல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய ஆயுர்வேத மருத்துவர் திரு. வசந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஆயுர்வேத மருத்துவம் மனித வாழ்வுடன் இயற்கையோடு ஒன்றியதாகும் என்று நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி முதல்வர் திருமதி கிளாரென்ஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 25 லட்சம் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, இந்தப் புதிய இணைப்புகள் ஒவ்வொன்றுக்கும் தலா 2 ஆயிரம் ரூபாயை அரசே வழங்கும் என்று கூறினார்.

இதன்மூலம் உஜ்வாலா திட்டத்தின்கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை 10 கோடியே 58 லட்சமாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிரின் ஆரோக்கியத்தை பேணிக் காக்கும் வகையில் தூய்மையான சமையல் எரிவாயு கிடைப்பதை உறுதி செய்ய பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

மொராக்கோ சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அந்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Ryad Mezzour-ஐ சந்தித்துப் பேசியுள்ளார்.

Rabat நகரில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு, மருந்துப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் ரசாயன துறைகளில் இந்தியா - மொராக்கோ இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்ததாக திரு. ராஜ்நாத் சிங் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

< < < < > > > >

வேளாண் சாதனங்களுக்கான ஜி.எஸ்.டி. வரி குறைக்கப்பட்டிருப்பது, நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

டிராக்டர், பவர் டில்லர் உள்ளிட்ட சாதனங்களுக்கான வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால் இந்த சாதனங்களின் உற்பத்தி அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பெருமளவில் பயனடைவதன் மூலம் வளமான இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

< < < < > > > >

கனடாவின் பிரதமராக திரு. Mark Carney பொறுப்பேற்ற பிறகு இந்தியா - கனடா இடையேயான நட்புறவு மேம்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் இம்மாத தொடக்கத்தில் கனடா நாட்டின் பாதுகாப்பு ஆலோசகர் திருமதி Nathalie Drouin உடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து இந்தியாவின் நலனுக்கு எதிராக கனடாவில் இருந்து செயல்பட்டு வரும் காலிஸ்தான் அமைப்பின் முக்கிய நிர்வாகியான Inderjeeth Singh Gosal கைது செய்யப்பட்டிருப்பது இருதரப்பு உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பிரதிபலிப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

< < < < > > > >

*சரக்கு மற்றும் சேவை வரி பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதன் காரணமாக நவராத்திரி மற்றும் தீபாவளிப் பண்டிகை களைகட்டி இருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து நாளேடு ஒன்றில் வெளியான கட்டுரையையும் அவர் தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.*

*வரிகுறைப்பு காரணமாக நேற்று ஒரு நாளில் மட்டும் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான கார்கள் விற்பனையாகி இருப்பதாக அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேபோன்று இருசக்கர வாகனங்கள், தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனையும் பெருமளவு அதிகரித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.*

*< < < < > > > >*

*தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்குகிறது.*

*சட்டப்பேரவைச் செயலாளர் திரு. சீனிவாசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.*

*அன்றைய தினம் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தலைமையில் நடைபெறும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேரவைக் கூட்டம் எத்தனை நாட்களுக்கு நடைபெறும் என்பது குறித்து முடிவு செய்யப்படும்.*

*< < < < > > > >*

*மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கவுன்சில் சார்பில், தென் மண்டல அளவிலான தொழிற்பயிற்சி அளிப்பது குறித்த பயிலரங்கம் சென்னையில் நாளை நடைபெற உள்ளது.*

*தமிழகம், ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளா, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.*

*இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது குறித்தும் இந்த பயிலரங்கில் விவாதிக்கப்பட உள்ளது.*

< < < < > > > >

*மறைந்த பிரபல பாடகர் Zubeen Garg-ன் உடல் முழு அரசு மரியாதையுடன் குவஹாத்தி அருகே இன்று தகனம் செய்யப்பட்டது.*

*மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, திரு. சர்பானந்த சோனோவால், அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா உள்ளிட்டோர் இறுதிச்சடங்கில் பங்கேற்று Zubeen Garg-ன் உடலுக்கு மரியாதை செலுத்தினர்.*

*வடகிழக்கு திருவிழாவில் பங்கேற்பதற்காக சிங்கப்பூர் சென்றிருந்த அவர், கடந்த 17ஆம் தேதி கடலில் ஸ்கூபா டைவிங் மேற்கொண்டபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார்.*

< < < < > > > >

*நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்த வாக்குறுதிகள் 2030ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. ஆன்டனியோ குட்டரெஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பள்ளிகளில் மாணவியர் சேர்க்கை கணிசமாக அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதேபோன்று குழந்தைகள் மற்றும் பேறுகால உயிரிழப்புகள் குறைந்து வருவதுடன், HIV தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் பெருமளவு குறைந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.*

< < < < > > > >

*Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Meghna Reddy காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*சீன தைபேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் 21-06, 21-18 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் Pei Chu Chen-ஐ வென்றார்.*

*< < < < > > > >*

*சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக பாரா நீச்சல் சாம்பியன் போட்டியின் 100 மீட்டர் பிரிவில் இந்தியாவின் ஹிமான்ஷு இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*< < < < > > > >*